**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

**மட்டம் I பரீட்சை - 2026 யூலை**

## (1604) வணிகச் சூழல்

ஒட்டுமொத்த வினாத்தாளும் பெரும்பாலும் மட்டம் 01 இற்குரிய வணிகச் சூழல் பாடத்தின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியிருந்ததால், பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த அறிவையும் பாடப் பரப்புகள் பற்றிய புரிதலையும் பரீட்சிப்பதே இதன் நோக்கமாக இருந்தது. மொத்தத்தில், அதிகமான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமாக அமைந்திருந்த அதே வேளை மற்றையவர்கள் நன்றாக விடையளிக்கத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் வினாத்தாளுக்கு எவ்வாறு விடையளித்துள்ளார்கள் என்பதை அவதானித்ததில், கேள்விகளைப் புரிந்து கொள்வதிலுள்ள சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும், போதுமான புள்ளிகளைப் பெற கருத்துள்ள விடயங்களை எழுதி விடையளிப்பதற்கும் முக்கிய குறிப்புகள் இருப்பது உணரப்பட்டது.

### <u>பகுதி A</u>

**வினா இல. 01**

இந்தப் பகுதியின் மூலம், வணிகச் சூழல் பாடத்தின் ஒட்டுமொத்தப் பரப்பும் பரீட்சிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்தனர். 100 புள்ளிகளில் 40 புள்ளிகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், பெரும்பாலான பரீட்சார்த்திகள் சித்திப் புள்ளியைப் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் **1.4, 1.7, 1.12, 1.17** ஆகிய உப வினாக்களுக்கு வெற்றிகரமாக விடையளிக்கவில்லை. வினாக்கள் பற்றிய அவதானிப்புகள் கீழ்வருமாறு:

**1.4** சில பரீட்சார்த்திகள், ஒரு கம்பனியின் பங்குகளை வாங்குமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கும் ஆவணம் தொடர்பில் விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை. இதனால் எதிர்பார்க்கப்பட்ட விடைக்குப் பதிலாக அவர்கள் அமைப்பக விதிகள் என்ற விடையைத் தெரிவு செய்திருந்தனர்.

**1.7** சில பரீட்சார்த்திகள், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை செய்யப்படுவதில்லை என்பது பற்றி அறிந்திருக்கவில்லை. இதனால் அவர்கள் புள்ளிகளைப் பெறவில்லை.

**1.12** பெரும்பாலான பரீட்சார்த்திகள், வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஒன்றின் பங்குதாரர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை ஒன்று என்பதை அடையாளங் காணவில்லை என்பதால், அவர்கள் புள்ளிகளை இழந்திருந்தனர்.

**1.17** அதிகளவான பரீட்சார்த்திகள், பணச் சந்தையிலுள்ள கருவிகளுக்கான உதாரணங்களை அடையாளங் காணவில்லை. பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தையில் உள்ள கருவிகள் பற்றிப் புரிந்து கொள்வதில் பரீட்சார்த்திகள் சரியான அறிவைக் கொண்டிருக்கவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது. மாற்றுண்டியல்கள், திறைசேரி உண்டியல்கள், வர்த்தகத்

தாள்கள், வைப்புச் சான்றிதழ், மறுகொள்வனவு உடன்படிக்கைகள் போன்றவற்றைக் குறிப்பிட்ட பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

எவ்வாறாயினும், மேலுள்ள வினாக்களைத் தவிர, அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாத்தாளுக்கு நன்றாக விடையளித்திருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

இந்தப் பகுதி நான்கு கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வழங்கப்பட்டிருந்தன.

### வினா இல. 02

இவ்வினா "பங்குடமை மற்றும் பயனுறுதிமிக்க வகையில் வாடிக்கையாளர்களை அணுகுவதற்கான நவீன வர்த்தகப் போக்குகள்" பற்றிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடைளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** இங்கு, பங்குடமையின் அம்சங்கள் பரீட்சிக்கப்பட்டன. மிகச் சில பரீட்சார்திகளே அம்சங்கள் பற்றிய புரிதலைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் பங்குடமையின் அனுகூலங்களை எழுதியிருந்தனர்.

**(c)** அதிகளவான பரீட்சார்த்திகள் வர்த்தகத்தின் புதிய போக்குகளை அடையாளங் கண்டிருந்ததுடன், முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் புதிய போக்குகளைச் சரியாக அடையாளங் காணவில்லை. அவர்கள் வர்த்தகத்தின் போக்குகளாக தள்ளுபடிகள், பிரசித்தப்படுத்தல், சந்தைப்படுத்தல் போன்றவற்றை எழுதியிருந்தனர்.

தொழினுட்ப திசைமுகப்படுத்தல், ஒரே கூரையின் கீழான தீர்வுகள், வியாபார நேரத்தை அதிகப்படுத்தல், விரிவாக்கப்பட்ட குறிப்பீடுகள், அதிகரித்த வாடிக்கையாளர் சேவைகள் போன்றவற்றை விளக்கியிருந்த பரீட்சார்த்திகளால் புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 03

**(a)** இங்கு, வணிகமொன்றுக்குத் தேவையான ஆதரவுச் சேவைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இப்பகுதியை அடையாளங் கண்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக இனங்கண்டிருந்த போதிலும், அவர்கள் காரணங்களை விளக்கத் தவறியதால் சில புள்ளிகளை இழந்திருந்தனர்.

**(c)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் பௌதிகக் காரணிகள், முறைமையின் பழுது, எதிர்மறையான எண்ணங்கள், உடலியல் காரணிகள், மொழி மற்றும் கலாசார பல்வகைமை, சுகாதார

ஒழுங்கின்மை, போன்றவற்றை பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்கான தடைகளாகச் சரியாகக் குறிப்பிட்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 04

**(a)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆனால் சிலர் தொழில்முனைவோர் மற்றும் முகாமையாளருக்கு இடையேயான வேறுபாட்டை அடையாளங் காணத் தவறியிருந்தனர். இது பாடப் புத்தகத்தில் உள்ள ஒரு நேரடி வினாவாகும். பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு முழுமையாகப் புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் SME கள் தோல்வியடைவதில் தாக்கம் செலுத்துகின்ற காரணிகளை அடையாளங் கண்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்த அதே வேளை, சில பரீட்சார்த்திகள் தங்கள் பொது அறிவைப் பயன்படுத்தி மாற்று விடைகளை எழுதியிருந்தனர்.

**(c)** குறிப்பிடத்தக்க சதவீதமான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஆயினும் சிலர் இலங்கைப் பொருளாதாரத்திற்கு SME-கள் ஏன் முக்கியமானவை என்பதற்கான காரணங்களை விளக்காமல் வினாவுக்கு விடையளித்திருந்ததால் 4 புள்ளிகளில் 2 புள்ளி களையே பெற்றிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 05

**(a)** இங்கு காசை விட காசோலைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சிலர் காசோலைகளைப் பயன்படுத்துவதன் அனுகூலங்களுக்குப் பதிலாக நடைமுறைக் கணக்குகளைப் பேணுவதால் ஏற்படும் அனுகூலங்களை எழுதியிருந்தனர்.

**(b)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளை எழுதி, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். ஏனையோர், ஒரு வணிகம் இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதற்கான காரணங்களை விளக்காது விடை எழுதியிருந்தனர். இதனால் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் 50% ஐ மாத்திரமே அவர்களால் பெற முடிந்தது.

**(c)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்து, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சிலர் காசோலை மறுக்கப்படக்கூடிய வழிகளைக் குறிப்பிடாது பொருளற்றதும் தெளிவற்றதுமான விடைகளை எழுதியிருந்தனர்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி C

**வினா இல. 06**

இது **வரையறுக்கப்பட்ட செரண்டிப் ஏ.ஐ. (தனியார்) கம்பனி** தொடர்பான விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாவாக இருந்தது. பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருந்ததுடன், அதில் பலர் சராசரிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(a)** சிறு அளவிலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்ததுடன் ஏனையோர் வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் அம்சங்களுக்குப் பதிலாக பங்குடமையின் அம்சங்களைக் குறிப்பிட்டிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் தரப்பட்ட விடயங்களைச் சரியான அடையாளங் காணவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

**(b)** கணிசமான எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் PESTEL பகுப்பாய்வு தொடர்பான காரணிகளை அடையாளங் கண்டு, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் PESTEL இற்குப் பதிலாக SWOT பகுப்பாய்வின் அடிப்படையில் விடை எழுதியிருந்தனர்.

**(c)** பெரும்பாலான பரீட்சார்த்திகள் டிஜிடல்மயமாதலின் சாதகமான தாக்கங்களைப் புரிந்து கொண்டிருந்தனர். ஆனால், சில பரீட்சார்த்திகள் விடையை விளக்காது தாக்கங்களை மாத்திரம் எழுதியிருந்ததால், இதற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசியையே அவர்களால் பெற முடிந்தது.

**(d)** பெரும்பாலானவர்கள் வினாவை நன்கு புரிந்துகொண்டிருந்ததுடன் **வரையறுக்கப்பட்ட செரண்டிப் ஏ.ஐ. (தனியார்) கம்பனி** போன்ற வணிகமொன்றின் சமூகப் பொறுப்புடைமையின் நன்மைகளை எழுதி, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(e)** பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் வினாவைச் சரியாக இனங்கண்டு, இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரபலத்திற்கான காரணங்களைச் சரியாக எழுதியிருந்தனர். இதனால் அவர்கள் முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். மிகச் சில பரீட்சார்த்திகளே தெளிவற்ற விடைகளை வழங்கியிருந்தனர். வேறு சிலர் இலத்திரனியல் வர்த்தகத்தின் பிரபல்யத்திற்கான காரணங்களை விளக்கியிருக்கவில்லை.

விடை எழுதுவதற்கு முன், வினாவை நன்கு வாசித்து, விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

- - -

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தை விருத்தி செய்வதில் கவனம் செலுத்த வேண்டிய பொதுவான விடயங்கள்:</u>**

(1) பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பாடப்புத்தகங்களை படித்தல் வேண்டும்.

(2) கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையளித்து பயிற்சி பெறுவதும் உரிய வினாத்தாள்களுடன் இணைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரலுக்கேற்ப விடையளித்து பயிற்சி பெறுவதும் மிகவும் முக்கியமானதாகும்.

(3) மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன்னர் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் வினாக்களையும் கவனமாக வாசித்தல் வேண்டும்.

(4) விடைகளை வினாத்தாளிலேயே எழுதி அதனை விடைத்தாள்களுடன் அனுப்ப வேண்டாம்.

(5) கட்டாயமாக விடையளிக்கப்பட வேண்டிய வினாக்களை கைவிட எத்தனிக்க வேண்டாம். இது குறைந்த புள்ளிகளையே பெறுவதற்கு வழிவகுக்கும்.

(6) அறிவை நிகழ்நிலைப்படுத்துவதற்கு அண்மையில் வெளியான இதழ்கள், கையேடுகள், பத்திரிகைகள் மற்றும் பாடப் புத்தகங்களைப் பயன்படுத்தவும்.

(7) புதிய வினாவுக்கு விடையளிக்க ஆரம்பிக்கும்போது ஒரு புதிய பக்கத்தைப் பயன்படுத்தவும்.

- * * * -